Source: *Tamil Murasu*, p3
Date: 24 November 2018

# பள்ளி வளாகத்தில் முன்னோட்ட மின்ஸ்கூட்டர் பகிர்வுச் சேவை

சவாரி சேவை நிறுவனமான 'கிராப்' புதிய மின்ஸ்கூட்டர் பகிர்வுச் சேவையின் முன்னோட்டச் சோதனையை சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக 'கெண்ட் ரிஜ்' வளாகத்தில் தொடங்கவுள்ளது.

நிறுவனத்தின் புத்தாக்கப் பங்காளியான 'கிராப் வென்சர்ஸ்' பல்கலைக்கழகத்துடன் இணைந்து இச்சேவையை அறிமுகப்படுத்தவுள்ளதாக நேற்று கூறியது.

இம்மூன்று மாத முன்னோட்டக் கட்டம் திங்கட்கிழமை அன்று தொடங்கியது. என்யுஎஸ் வளாகத்தில் உள்ள எட்டு இடங்களில் மின்ஸ்கூட்டர்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

அத்துடன் பகிர்வு தனிநபர் நடமாட்டத்திற்குரிய புதிய செயலியான 'கிராப்வீல்' சிங்கப்பூரில் சோதனையிடப்படுவதும் இம்முன்னோட்டக் கட்டத்தில் அடங்கும்.

அடுத்த சில வாரங்களில் வளாகத்தில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்களின் தேவையைப் பொறுத்து மின்ஸ்கூட்டர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்று கிராப் கூறியது.

இவ்வாண்டு இறுதிக்குள் நிறுத்துமிடங்களின் எண்ணிக்கையை 30 ஆக்க திட்டமும் உள்ளதாக நிறுவனம் சொன்னது.

அளவில் வேறுபட்டாலும், ஒவ்வொரு நிறுத்துமிடத்திலும் பத்து மின்ஸ்கூட்டர்களை நிறுத்தி வைக்கலாம் என்று கூறப்பட்டது.

முன்னோட்டக் கட்டத்தின் போது சேவையைப் பயன்படுத்துவோர் சலுகைக் கட்டணம் செலுத்துவார்கள் என்றும் கூடுதல் கட்டணம் ஏதுமின்றி காப்புறுதியும் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு நாளும் கிராப் நிறுவனத்தின் இயக்கக் குழு எல்லா மின்ஸ்கூட்டர்களையும் திரட்டி, அவற்றுக்கு மின்னூட்டி, அவற்றை அந்தந்த நிறுத்தங்களில் பயன்பாட்டுக்காக நிறுத்தி வைத்துவிடும்.

மேலும் சாதனங்களைப் பயன்படுத்துவோருக்கு பாதுகாப்பாக ஓட்டுவதன் தொடர்பிலும் செயலி வழி தகவல்கள் அனுப்பும் திட்டம் உள்ளதாக கிராப் கூறியது.

முன்னோட்டக் கட்டத்தின் போது ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் உதவி வழங்கவும் ஆதரவுக் குழு ஒன்று 24 மணி நேரமும் தயாராக இருக்கும்.

இடைவழிப் பேருந்துக்காக காத்திருப்பதற்குப் பதிலாக வளாகத்தினுள் அவசரத்தில் பயணம் செய்வதற்கு இச்சாதனங்கள் உதவும் என்று மாணவர் திரு நிக்கலஸ் டே பகிர்ந்துகொண்டார்.

வளாகத்தில் ஏற்படும் போக்குவரத்துத் தேவைகளுக்கு மின்ஸ்கூட்டர்கள் எவ்வாறு உதவுகின்றன என்பதைக் கண்டறிய, கிராப் நிறுவனமும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகமும் மின்ஸ்கூட்டர்களுக்குரிய பகிர்வுச் சேவை பயன்படுத்தப்படும் முறையை ஆராயும். இந்த ஆராய்ச்சி முன்னோட்டச் சோதனையில் நடத்தப்படும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.